DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 64/2025
Miscellaneous :
Sessions : PW 8
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | சுரேந்திரன் |
| Father / Husband Name | தேவராசன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **19.06.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன். கடந்த 2024 ஆம் வருடம் மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பார்த்திபன் மற்றும் காவல் ஆய்வாளர் ஏழுமலை ஆகியோர்களின் கையெழுத்தும் கையொப்பம் நன்றாக தெரியும் என்பதாலும் அவர்கள் தற்போது பணியிடமாறுதலாகி சென்றுவிட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 20.06.2024 ம் தேதி மாலை 5.00 மணிக்கு சுனில்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை சிறப்பு உதவி ஆய்வாளர் பார்த்திபன் என்பவர் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்–187/2024 இதச பிரிவுகள் 279, 337 304 (A) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பிணை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. ஏழுமலை என்பவரிடம் ஒப்படைத்துள்ளார். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் காவல் ஆய்வாளர் ஏழுமலை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.06.2024 ஆம் தேதி மாலை 5.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் லோகநாதன் மற்றும் செந்தில் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த மாதிரி வரைபடம் அசாஆ 5 ஆகவும் மற்றும் பார்வை மகசர் அசாஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கடந்த 21.06.2024 ஆம் தேதி காலை 8.30 மணி முதல் 10.00 மணிக்குள் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் விபத்தில் இறந்த டில்லிராணி என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்துள்ளார். **(அந்த பிரேத விசாரணை அறிக்கை அசா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரியை தேடி வந்த நிலையில் 25.06.2024 ம் தேதி காலை 11.45 மணியளவில் நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

பின்னர் 26.06.2024 ம் தேதி விபத்தில் பங்கெடுத்த வாகனங்களான TN 07 DA 6039 என்ற பேட்டரி கார் மற்றும் 29.07.2026 ம் தேதி TN 01 AA 3394 என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்காக அனுப்பிவைத்துள்ளார்.

3. மோட்டார் வாகன ஆய்வாளர் செல்வி என்பவரை விசாரணை செய்து அவர் அளித்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று தாக்கல் செய்துள்ளார். **(அந்த வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ 8 மற்றும் அசாஆ 9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிது).** 21.06.2024 ம் தேதி இறந்துபோன டில்லிராணி என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவர் விஜயன் என்பவரை விசாரணை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். **(அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** விபத்தில் காயமுற்ற சுந்தரம் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஞானவேல் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று முறையே அசாஆ 11 மற்றும் அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** சுந்தரம் என்பவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவுகளான இதச பிரிவுகள் 279, 337 304 (A) ல் இருந்து இதச பிரிவுகள் 279, 338 304 (A) ஆக பிரிவு மாற்றம் செய்து 25.06.2024 ஆம் தேதியில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் விசாரணையை முடித்து 31.07.2024 ம் தேதி எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338 304 (A) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

4. புகார்தாரர் அசா1 சுனில் குமார் என்பவர் எப்பொழுது புகார் கொடுத்தார் என்றால் 20.06.2024 ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு புகார் கொடுத்துள்ளார். அசா1 அவரது புகாரில் அவரது அப்பா இருசக்கர வாகனத்தில் வலது கைப்பிடி மீது உரசி விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அசா1 அவரது புகாரில் உத்திரமேரூர் சாலையில் நாகாத்தம்மன் கீழாமூர் கோவிலுக்கு முன்பாக சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகாரில் சம்பவம் நடந்த நேரம் காலை சுமார் 11.30 மணியளவில் என்று இடைசெறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சாலையின் இருபுறமும் மெய்கால் புறம்போக்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் கீழாமூர் நாகாத்தம்மன் கோவில் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி கோவிலில் இருந்து சம்பவயிடம் சற்று தொலைவில் இருந்ததால் குறிப்பிடவில்லை. பார்வை மகசரில் கீழாமூர் நாகாத்தம்மன் கோவில் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. பிரேத விசாரணை அறிக்கையில் காலம் எண் 4 ல் கீழாமூர் நாகாத்தம்மன் கோவில் முன்பாக இறந்தவரை கடைசியாக பார்த்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதி அறிக்கையில் காலம் 16 ல் ராமாபுரத்தில் இருந்து உத்திரமேரூர் சாலை கீழாமூர் அருகே சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நாகாத்தமன் கோவில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். மேற்படி சம்பவயிடத்தை அடுத்து கோவிலும் அதனை அடுத்து கீழாமூரும் உள்ளதால் சம்பவயிடம் கீழாமூர் அருகே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ தினத்தன்று இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற சுந்தரம் என்பவரின் ஓட்டுநர் உரிமம் காலாவதியாகிவிட்டது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அசாஆ 9 ல்** காலம் எண் 12

ல் H/L wiser scratches  மற்றும் RHS indicator RV mirror broken என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தில் வேறு எந்த பகுதியிலும் சேதாரம் உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்து 39 நாட்கள் கழித்து விபத்துக்குள்ளான இருசக்கர வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.  விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் காரை விபத்து நடந்து 6 நாட்கள் கழித்து  மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. பட்டியல் சாட்சிகள் ராமு மற்றும் பிரகாஷ் ஆகியோரின் போலிசார் வாக்குமூலத்தில் சம்பவயிடத்திற்கு எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் போலிசார் விசாரணையில் எதிரியை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் பிரகாஷ் மற்றும் ராமு ஆகியோர்களை எங்கு விசாரித்தோம் என்றால் மேற்படி அவர்களது வாக்குமூலத்தில் அதை பற்றி குறிப்பிடவில்லை. மேற்படி அசா3 ராமு என்பவருக்கு வழக்கில் இறந்த டில்லி ராணி என்பவர் அண்ணி முறை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 5 முதல் 7 வரையானவர்களுக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் சரியல்ல.

7. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் சொன்ன நேரம் மற்றும் தேதியில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.  காயமுற்ற சுந்தரம்  என்பவரின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.  ராமு மற்றும் பிரகாஷ் ஆகியோர் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் அவர்களை வழக்கிற்காக கண்ணுற்ற சாட்சியாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி 5 மாரிமுத்து என்பவர் கேள்வியுற்ற சாட்சி என்றால் சரிதான். சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் எதிரி மீது பொய்யாக தாக்கல் செய்துள்ள  இறுதி அறிக்கை ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும்  சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**